தாய்நாடு

The Motherland

# உரிமைக் குரலாக ஒலிக்கும்

தமிழர் திருநாள்- தைப்பொங்கல் நாளான இன்று- தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக் குரலாக- 'தாய்நாடு' இணையத்தில் உலா வருகிறது.

விரைவில் அச்சிலும் வெளிவரப் போகும் 'தாய்நாடு' தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல், சமூக, பண்பாட்டு விடயங்களில் ஆணித்தனமான தனது கருத்துகளை முன்வைக்கத் தயங்காது.

எங்கெல்லாம் தமிழ்த் தேசியத்துக்கும் தமிழ்த் தேசிய இனத்துக்கும் இன்னல் விளைவிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் எமது குரல் ஓங்கி ஒலிக்கும்.

நடுநிலைமை என்று வெளியுலகுக்குச் சொல்லிக் கொண்டு- தமிழ்த் தேசிய இனத்துக்கு நன்மை தரமுடியாத விடயங்களை உள்ளீர்த்துக் கொள்வதில் எமக்கு உடன்பாடு கிடையாது.

அதேவேளை, சமூகத்துக்குச் சொல்ல வேண்டியதை- சொல்லாமல் விடும் தவறையும் நாம் இழைக்க மாட்டோம்.

இன்றைய உலகில் மலிந்து போயுள்ள ஊடக யுத்தத்துக்குள்ளே சிக்கிக் கொள்வதற்கும் நாம் தயாரில்லை.

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காக ஓங்கிக் குரல் கொடுப்பதே இன்றைய தேவை.

தமிழ் மக்களின் வெளிக் கொணர வேண்டிய பிரச்சினைகள் ஆயிரம் இருக்கும் போது- வீண் விவாதங்களில் நேரத்தையும் உழைப்பையும் வீணடிக்க முடியாது.

ஊடகங்கள் மக்களின் பிரச்சினையை எடுத்துச் சொல்லும்- அவர்களுக்கு சரியான பாதையைச் சுட்டிக்காட்டும் கருவிகளாக இருக்க வேண்டும்.

ஆனால் அந்தப் பாதை வழியிலான நகர்வும் நடப்பும் தமிழ்மக்களின் விருப்பின்பாலானது.

அந்த உரிமையை மறுக்கின்ற போக்கில் எம்மால் உடன்பட முடியாது.

மாறிவரும் உலகுக்கு ஏற்றவாறு- நாமும் புதிய புதிய சிந்தனைகளில்- ஆய்வுகளில் இறங்கும்போது தான் தெளிவு பிறக்கும்.

சரியான பாதையை இனங்காண முடியும்.

மாற்றுச்சிந்தனை என்று புறக்கணிக்கப்படும் போது தான் கருத்துத் திணிப்பும் இயல்பாகவே உருவாக்கம் பெறுகிறது.

தமிழ் மக்களிடத்தில் சரியான கருத்துகளை எடுத்துச் சொல்வதிலும்- ஒரு நடப்பினால் ஏற்படக் கூடிய சாதக பாதகங்களைச் சொல்வதிலும் 'தாய்நாடு' உறுதியாக இருக்கும்.

'தாய்நாடு ஒரு புதிய மாற்றத்துக்கான வழிகாட்டியாகவும் இருக்கும்.

அடுத்த இதழில் சந்திப்போம்.

## மாவீரர் சுமந்த.....

இது இயற்கையானதோ உருவாக்கப்படுவதோ இல்லை. ஆனால் இதில் இரண்டும் உள்ளது.

ஒரு தேசியமானது பொதுவான பாரம்பரியம், மொழி, பண்பாடு என்பவற்றால் பிணைக்கப்பட்டு சமத்துவம் சுதந்திரம் கொண்டு வாழ்வதற்கான அரசியல் ஒன்றிணைவு.

தேசியத்தையும் இனத்தையும் ஒன்றாகக் குழப்பி மக்களை இயக்குவது தமிழ்த் தேசியத்தின் வளர்ச்சியைத் தடைசெய்து தமிழ்மக்களை ஒரு திராவிட இனவாதிகளாக்கி முடக்கப்பட்ட நிலைக்குள் தள்ளிவிடும்.

தமிழர் என்ற அடையாளம் ஒரு மதம் சார்ந்த அடையாளமும் அல்ல. அது ஒரு மதச்சார்பற்ற அடையாளம்.

தமிழ்த் தேசியம் இந்துக்களை (சைவர்கள், வைஷ்ணவர்கள் என்ற இரண்டும்) மட்டும் உள்ளடக்கவில்லை, மாறாக பல்வேறுபட்ட நம்பிக்கையாளரையும் உள்ளடக்குவதாகும்.

கிறிஸ்தவ தமிழரும் தமிழர்களே. பிராமணத் தமிழரும் தமிழரே. தலித் தமிழர், அவர்களில் சிலர் பௌத்தர்களாகவும் இருந்தாலும் அவர்களும் தமிழர்களின் ஒரு பகுதியினரே.

தமிழ்த் தேசியம் தனக்குள் கடவுள் நம்பிக்கை அற்றவர்களையும் உலகாயவாதிகளையும் கொண்டுள்ளது- ஒரு தேசியம் என்பது ஆழமானதும் சமுதாயத்தின் பிரிவுகளை ஊடறுத்தும் நிற்கும் விசாலமானதுமான பிணைப்பாகும்.

"ஒரு தேசியம் ஒரு சமுதாயமாகக் கற்பனை செய்யப்படுகிறது. அங்கே உண்மையில் சமத்துவம் அற்ற நிலையும் சுரண்டலும் ஒவ்வொருவரிலும் காணப்படினும் தேசியம் என்பது எப்போதும் ஆழமான சமாந்தர தோழமை கொண்டுள்ளதாக உருவகிக்கப்படுகிறது.

இத்தகைய சகோதரத்துவமானது கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் பல கோடி மக்களைக் கொலை செய்வதில் ஈடுபடாது இவை போன்ற வரையறுக்கப்பட்ட கற்பனைகளுக்காகத் தமது உயிரைக் கொடுக்கும் அளவுக்கு விரும்பச் செய்துள்ளது" -பெனடிக் அன்டர்சன்

தமிழர் தேசியம் பரவலான ஒருமைப்பாடு. வளர்ந்து வரும் ஒருமைப்பாடாகவும் இருக்கிறது.

"கடல் கடந்து பல நாடுகளில் வாழும் 8 கோடித் தமிழ் மக்கள் பொதுவான பாரம்பரியத்திலும், ஒரு வளம் மிக்க மொழியிலும் இலக்கியத்திலும் துடிப்பான பண்பாட்டிலும்: தமிழீழ மக்களின் அந்நிய சிங்கள ஆட்சியின் அடக்குமுறைக்கு எதிரான வீரமிக்க போராட்டத்தால் வளர்ந்து வேரூன்றிய ஒன்றித்த உறவிலும் வளர்ந்து வருகிறது.

மின்னியல் புரட்சியால் உந்தப்பட்ட நிலையில் சமத்துவமாக சுதந்திரமாக அமைதியாய் வாழும் உறுதியுடன் இலக்கு நோக்கிய ஒற்றுமை வளர்ச்சி பெறுகிறது.

தமது சக உறவுகளுக்கு எதிர்பார்க்கும் அர்த்தம் நிறைந்த உலகமொன்று சடத்திலிருந்து உருவாகும்..."

இத்தகைய இந்தத் தமிழ்த் தேசியம் தான் மாவீரர் நாளில் தமது உறவுகள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அவர்களுக்காகத் தம்முயிரை ஈகம் செய்த தமிழருக்காகத் தலை வணங்கி நிற்கும்.

ஆம், எங்கே எவர் வாழ்ந்தாலும் கௌரவத்துடனும் அமைதியுடனும் வாழ்வதற்காக அவர்கள் தம்மை ஈந்தவர்கள்.

தமிழில் நாம் இதனைத் தன்மானம் என்போம்...

இங்கே நாம் கூற விரும்புவது தமிழர் தேசியம் தன் வீரர்களைப் பெருமைப்படுத்த முற்படுகிறது என்பதை அல்ல.

பெருமைப் படுத்துவது என்பது பெரிது படுத்திப் புகழுவதாகும்.

தமிழ்த் தேசியம் பெரிதுபடுத்தவோ புகழவோ முற்படவில்லை.

ஆனால் நாம் எமது தேசிய வீரர்களை நினைத்து மதிப்பளித்து அழ முற்படுகிறோம்:

நன்றியோடு நினைவுகூர, பணிவோடு மதிப்பளிக்க, நினைத்து எம் மன ஆழத்தில் அழுதுவிட விரும்புகிறோம்.

அதே நேரத்தில் எமது சகோதர சகோதரிகள் எந்த நீதிக்கும் சுதந்திரத்துக்குமாகத் தமது உயிர்களைக் கொடுத்தார்களோ அவற்றுக்காக நாமும் எம்மை மீளவும் அர்ப்பணிக்க விரும்புகிறோம்.

உயிரைக் கொடுத்தவர்கள் வீணுக்காய் இறந்தவர்களாகி விடக் கூடாது.

"தேசிய நினைவுகளைப் பொறுத்தவரை துயரங்கள் வெற்றிகளை விடவும் பெறுமதி மிக்கவை.

ஏனென்றால் அவை எமக்குக் கடமைகளை நினைவூட்டுவதோடு ஒரு பொது எத்தனத்தின் தேவையை ஏற்படுத்துகிறது.

எனவே ஒரு தேசியத்துக்குத் தேவையாக பரந்த அளவிலான ஒற்றுமையும் கடந்த காலத்தில் ஒருவர் செய்த தியாகத்தையும் எதிர்காலத்தில் ஒருவர் செய்யத் தயாராக உள்ள தியாகம் பற்றிய உணர்வுகளின் கூட்டாகவும் இருக்கும்." -

ஏர்னஸ்ட் ரெனன்

## தமிழரின் அரசியல்.....

தேர்தலை முன்னிட்டு- தமிழர்களுக்காகத் திறந்து விடப்படும் இந்த வீதிகளும் உயர்பாதுகாப்பு வலயங்களும் இதுவரை அவர்களை அடிமை கொள்ளவும், அவர்களைச் சிரமப்படுத்தவுமே போடப்பட்டிருந்தன என்பது இப்போது நிருபணமாகிறது.

இதன்மூலம் இவர்கள் சாதித்தது தான் என்ன?

சரத் பொன்சேகாவும் மகிந்த ராஜபக்ஸவும் இதுபோன்ற தடைகளை அகற்றி ஒரு சமாதானப் புறச்சூழலை உருவாக்குவதில் முன்னின்றிருந்தால் நான்காவது கட்ட ஈழப்போர் நிகழ்ந்திருக்காது.

ஒரு கொடிய போருக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை தமிழ் மக்களுக்கு வந்திருக்காது.

அவர்கள் மனங்களில் ஆறாத ரணங்கள் ஏற்பட்டிருக்காது.

தமிழ் மக்களை இத்தனை துயரங்களுக்குள்ளேயும் தள்ளியவர்கள்- தமது வெற்றிக்குத் தேவைப்படும் வாக்குகள் சிங்களவர்களிடம் இருந்து கிடைத்தால் மட்டும் போதாது என்ற நிலை வந்தபோது தான் தமிழர்களிடம் கையேந்த வருகிறார்கள்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் என்ன முடிவை எடுக்கப் போகிறார்கள்?

யாருக்காக வாக்களிக்கப் போகிறார்கள் என்பது கேள்வி.

தமிழ் மக்களின் வாக்குகள் யாருக்குக் கிடைத்தாலும் நிச்சயமாக இந்த இருவரில் ஒருவர் தான் ஜனாதிபதியாகப் போகிறார் என்பது தெளிவு.

அதேவேளை, இந்த இருவரில் எவருக்கேனும் வாக்களிப்பதால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் கிட்டி விடாது.

ஆட்சி மாற்றமோ அல்லது இப்போதைய ஆட்சியின் நீட்சிக்கான அங்கீகாரமோ தமிழ் மக்களின் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற வாதம் சரி அப்படியான கருத்தியலும் சரி தவறானவை.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் எந்தவொரு சிங்கள அரசியல் தலைமையும் நியாயமான- நீதியான- கௌரவமான தீர்வை வழங்கத் தயாரில்லை.

இந்த உண்மையை இன்னொரு தடவை தமிழ் மக்கள்- இவர்களின் கையால் குட்டுப்பட்டுத் தான் அறிந்து கொள்ள வேண்டுமா?